உ



உரும்பிராய்

# அமரர் திருமதி தங்கரத்தினம் துரையப்பா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

26-03-2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



உரும்பிராயை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்
# திருமதி தங்கரத்தினம் துரையப்பா

அவர்களின்

மறைவுகுறித்து வெளியிடப்படும்

# நினைவு மலர்

26-03-2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

தரணி தனில் நலமாய்
வாழ்வதற்கு தனித்து நல்வழி பலவும்
காட்டினாய் சீர்பெற்றபுகழ் வளர்ச்சிக்கு
சீரோடு நின்றுழைத்து மெழுகுவர்த்தியாக
உருகி ஒளிதந்த உன் இனிய
நினைவுகளை எங்களின்
உதிரங்களினால் சுமந்த வண்ணம்
இம்மலரை அவரின் பாதங்களுக்கு
அர்ப்பணிக்கின்றோம்.

~குடும்பத்தினர்~

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# தோத்திரப்பாக்கள்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிரவென் கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறையரசு செய்க குறை விலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி தங்கரத்தினம் துரையப்பா அவர்களின் வாழ்க்கை வரலாறு

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" - குறள்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நீர்வளமும் நிலவளமும், கல்விச் சிறப்பும் பொருந்திய உரும்பிராய் என்னும் கிராமத்தில் செல்லப்பா பொன்னாச்சி தம்பதியினரின் புதல்வியாக 26-06-1919 இல் தங்கரத்தினம் அவர்கள் அவதரித்தார். அனைவருடனும் அன்புடனும் பண்புடனும் வாழ்ந்தார். இவரது சகோதரர்களாக மகேஸ்வரி, சிவபாக்கியம், வேலாயுதபிள்ளை, பூரணம், பரமலிங்கம், தனலட்சுமி என்பவர்கள் சகோதரர்கள் ஆவார்.

இவர் சுதுமலையைச் சேர்ந்த சின்னக்குட்டி அரியனாச்சி தம்பதியரின் புதல்வன் துரையப்பா என்பவரைத் திருமணம் புரிந்து செல்லம்மா, அன்னலட்சுமி, ஜெகசோதி, பத்மாவதி, தவராசா, யோகராசா, அரசரத்தினம், புஸ்பராணி என்பவர்களை நன்மக்களாகப் பெற்றனர். பிள்ளைகளைப் பேணி பெருமையுடன் வளர்த்து படிக்கவைத்து உரிய பருவத்தில் அவர்களுக்கு திருமணம் செய்து வைத்து நன்மருமக்களையும் அன்புப் பேரப்பிள்ளைகளையும் பெற்று மகிழ்ந்தார்.

மேலும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதர, சகோதரிகள், மைத்துனர்களை தவிக்க வைத்துவிட்டு தனது 85 ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனைபெயர்களிற்கான இடங்கள்

01) ஏழுமலைகள் கூடிய நகரம் / அழியாத நகரம் - உரோமபுரி
02) பொற்கோயில் நகரம் - அமிர்தசரஸ் (இந்தியா)
03) பொன்வாயில் நகரம் - சன்பிரான்ஸ்சிக்கோ
04) புயலடிக்கும் நகரம் - சிக்காக்கோ
05) சூரியன் உதிக்கும் நாடு / காகித வீடு - ஜப்பான்
06) நள்ளிரவுச் சூரிய நாடு - நோர்வே
07) சூரியன் மறையும் நாடு - இங்கிலாந்து
08) இருண்ட கண்டம் / குகைவீடு - ஆபிரிக்கா
09) உலகின் கூரை - திபெத்
10) உலகின் சக்கரைக் கிண்ணம் - கியூபா
11) எகிப்தின் கொடை - நைல்நதி
12) சீனாவின் துயரம் - குவாங்கோநதி
13) ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் - சுவிற்சிலாந்து
14) ஐரோப்பாவின் நோயாளி - துருக்கி
15) ஐரோப்பாவின் போர்க்களம் - பெல்ஜியம்
16) தெற்கேயுள்ள பிரித்தானியா - நியூசிலாந்து
17) பரிசுத்த பூமி - பலஸ்தீனம்
18) ஈடனின் தோட்டம் / இந்துசமுத்திர முத்து - இலங்கை
19) மரகதத்தீவு - அயர்லாந்து
20) ஆசிய நோயாளி / தங்கக்கோபுர நாடு - பர்மா
21) ஐரோப்பாவின் கோழிக்கூடு - நெதர்லாந்து
22) செங்கட்டி வீடு - சீனா
23) குடிசைவீடு - வடஅமெரிக்கா
24) இடிமின்னல் நாடு - பூட்டான்
25) அதிகாலை அமைநாடு - கொரியா
26) ஆயிரம் ஏரிகள் கொண்ட நாடு - பின்லாந்து
27) கங்காரு நாடு / பற்றைவீடு / தங்கப்போர்வைநாடு - அவுஸ்திரேலியா
28) புல்வீடு - ஹவாய்
29) மூங்கில் வீடு - கலிபோர்னியா
30) பனிக்கட்டிவீடு - கிறீன்லாந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகநாடுகளின் தேசிய சின்னங்கள்

| | | |
|---|---|---|
| 01) அமெரிக்கா | – | தங்கத்தடி |
| 02) அவுஸ்திரேலியா | – | கங்காரு |
| 03) அயர்லாந்து | – | ஹப்பரக் மலர் |
| 04) பிரான்ஸ் | – | அல்லிமலர் |
| 05) பிரித்தானியா | – | ரோஜாமலர் |
| 06) கனடா | – | வெள்ளைமலர் |
| 07) டென்மார்க் | – | கடற்கரைச்செடி |
| 08) இந்தியா | – | சிங்கத்தின் தலை |
| 09) ஈரான் | – | ரோஜாமலர் |
| 10) ஜப்பான் | – | கூட்டுப்புழு |
| 11) பாகிஸ்தான் | – | பிறை |
| 12) ஜேர்மனி | – | கான்பூ |
| 13) ஸ்பெயின் | – | கருடன் |
| 14) சுவிற்சிலாந்து | – | இடல்விஸ்மலர் |
| 15) பெல்ஜியம் | – | அசலியா மலர் |
| 16) ருமெனியா | – | பூவரசம்பூ |
| 17) எகிப்து | – | தாமரைப்பூ |
| 18) சீனா | – | திராட்சைமலர் |
| 19) போலந்து | – | சோலிமலர் |
| 20) ஈராக் | – | சிவப்பு ரோஜா |

# சர்வதேசக் குறியீடுகள்

| | | |
|---|---|---|
| 01) ஒலிவ் மரத்தின் இலை | – | சமாதானம் |
| 02) புறா | – | சமாதானம் |
| 03) வெள்ளைக்கொடி | – | சமாதானம் |
| 04) மேல்நோக்கிச் செங்குத்தாக கொடி | – | சமாதானம் |
| 05) தலைகீழாகக் கொடி | – | துன்பம் |
| 06) அரைக்கம்பத்தில் கொடி | – | இரங்கல் |
| 07) மஞ்சள் கொடி | – | தொற்றுநோய் |
| 08) சிவப்புக் கொடி | – | புரட்சி |
| 09) கறுப்புக் கொடி | – | எதிர்ப்பு |
| 10) கறுப்புத்துணி | – | துக்கம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11) சிவப்பு விளக்கு - ஆபத்து
12) தாமரை - பண்பாடு
13) சக்கரம் - வளர்ச்சி
14) எலும்பு நடுவில் மண்டைஓடு - ஆபத்து
15) கையில் தராசு ஏந்திய
கண்கட்டப்பட்டுள்ள பெண் - நீதி

# உலகில் மிகப்பெரியவை

01) பாலைவனம் - சகாரா
02) தீவு - கிறின்லாந்து
03) விலங்கு - நீலத்திமிங்கிலம்
04) நீண்டசுவர் - சீனப்பெருஞ்சுவர்
05) சிலை - நியூயோர்க் சுதந்திர சிலை
06) உயரமான மலை - இமயமலை
07) பெரிய வளைகுடா - மெக்சிக்கோ
08) பெரிய கடல் - தென்சீனக்கடல்
09) பெரிய தீபகற்பம் - அரேபியா
10) உயரமான நீர்வீழ்ச்சி - ஏஞ்சல்
11) அகலமான நீர்வீழ்ச்சி - கோனே நீர்வீழ்ச்சி
12) உயரமான ஏரி - தித்திக்கா ஏரி
13) ஆழமான ஏரி - பேகல்
14) கோபுரம் - ஈபிள்கோபுரம்
15) நாடு - ரஷ்யா
16) விரிகுடா - ஹட்சன்
17) பீடபூமி - திபெத்
18) நீளமானநதி - அமேசன்
19) பெரிய கழிமுகம் - வெல்டா
20) மிகவும் குளிர்ச்சியான பகுதி - அந்தாட்டிக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு வைத்தியக் குறிப்புக்கள்

☆**கோடையில் ரத்த அழுத்தம் உயர்வதைத் தடுக்க :** முருங்கைக் கீரை மற்றும் வாழைத் தண்டை உணவில் அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும். மூச்சுப் பயிற்சி மற்றும் தியானம் ஆகியவையும் ரத்த அழுத்தம் குறைய உதவும்.

☆**உடல் குளிர்ச்சியாக இருக்க :** முள்ளங்கி வேக வைத்த தண்ணீரில் சர்க்கரை போட்டுச் சாப்பிட்டால் உடல் குளிர்ச்சியாக இருக்கும்.

☆**வெயில் தாகம் அறியாமல் இருக்க :** நெல்லிக்கனியைக் காலை - மாலை ஒன்று சாப்பிட்டு வந்தால் கோடைக்கால வெய்யிலின் தாக்கம் தெரியாது.

☆**பூரான் கடிவிஷம் நீங்க :** ஒரு துண்டு மஞ்சள், கைப்பிடியளவு குப்பை மேனி இலை, சிறிது உப்பு இவைகளை ஒன்றாக சேர்த்து மை போல் அரைத்து உடல் முழுவதும் பூசி 1 மணி நேரம் வைத்திருந்து பின் குளிக்க வேண்டும். இவ்வாறு 3 நாட்களுக்குச் செய்துவர பூரான்கடி விஷம் நீங்கும்.

☆**விக்கல் நிற்க :** திப்பிலி, சீரகம் இவை இரண்டையும் சம அளவு எடுத்து பட்டுப்போல் தூளாக்கி அதில் 1 தேக்கரண்டியளவு எடுத்து சிறிதளவு தேனில் கலந்து குடிக்க விக்கல் நிற்கும்.

☆ **தலைவலி குணமாக:** இரண்டு கடுக்காயை எடுத்து உடைத்து அதன் கொட்டைகளை எடுத்துச் சட்டியில் போட்டு, அத்துடன் 10 கராம்புகளை இடித்து அதனுடன் சேர்த்து சிறிது நீர் விட்டு, இறுகக் காய்ச்சி எடுத்து ஆறியதும் குடிக்க தலைவலி உடனே குணமாகும்.

☆.**சோகை நோய் குணமாக :** இரு கடுக்காயின் கொட்டையை எடுத்து அதனுடன் 10 மிளகும் சிறிது கீழ்க்காய் நெல்லி வேரும் சேர்த்து மை போல அரைத்து அதனுடன் அரைக்கப் நீர் மட்டும் சேர்த்து தொடர்ந்து 30 நாட்கள் சாப்பிட சோகை குணமாகும்.

☆ **விக்கல் குணமாக :** இரு கடுக்காய் கொட்டைகளை எடுத்து அதனைப் பட்டுப்போல் தூளாக்கிக் கொண்டு அதில் சிறிது எடுத்து அதனுடன் தேனைக் கலந்து சாப்பிட்டு வர விக்கல் குணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☆ **சேற்றுப்புண் குணமாக :** ஜாதிக்காயையும், மஞ்சளையும் சம அளவு எடுத்து மைபோல் அரைத்துக் கொண்டு, புண்ணை நன்றாக கழுவி விட்டு இரவு படுக்கும் பொழுது, புண்ணின் மேல் கனமாகத் தடவிவர மூன்று நாட்களில் புண் ஆறும்.

☆**தேமல் மறைய :** ஜாதிக்காய் ஒன்றை எடுத்து அரைக்கைப் பிடியளவு நாயுருவி இலையைச் சேர்த்து மைபோல அரைத்து தேமல் உள்ள இடத்தைச் சுத்தம் செய்து அவ்விடத்தில் கனமாகப் பற்றுப் போட்டுவர தேமல் சிறிது சிறிதாக மறையும்.

☆**சளித்தொல்லை தீர :** ஜாதியக்காயை நீர்விட்டு உரசி எடுத்து, அதை ஒரு கரண்டியில் இட்டு கொதிக்க வைத்து, இளஞ்சூடாக இருக்கும் போதே நெற்றி, மூக்கின் மேல் பற்றுப்போட சளித்தொல்லை குணமாகும்.

## முக்கிய தினங்கள்

ஜனவரி 12 - தேசிய இளைஞர் தினம்
ஜனவரி 16 - இராணுவ வீரர்தினம்
ஜனவரி 26 - குடியரசுதினம், சர்வதேச கஸ்டம்ஸ் தினம்
பெப்ரவரி28 - தேசிய அறிவியல் தினம்
மார்ச் 8 - சர்வதேச பெண்கள்தினம்
மார்ச் 15 - உலக ஊனமுற்றோர் தினம்
மார்ச் 21 - உலக வனதினம்
ஏப்பிரல் 7 - உலக ஆரோக்கிய தினம்
ஏப்பிரல் 22 - பூமி தினம்
மே 1 - தொழிலாளா தினம்
மே 3 - பத்திரிகை சுதந்திர தினம்
மே (இரண்டாம் ஞாயிறு) - தாய் தினம்
மே 8 - உலக செஞ்சிலுவைதினம்
மே 15 .- சர்வதேச குடும்ப தினம்
மே 17 - உலக தகவல் தொடர்பு தினம்
மே 24 - காமன்வெல்த் தினம்
மே 31 - புகையிலை எதிர்ப்பு தினம்
ஜூன் 5 - உலக சுற்றுச்சூழல் தினம்
ஜூன் 27 - உலக நீரழிவாளர் தினம்
ஜூலை 11 - உலக மக்கள் தொகை தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஆகஸ்ட் 6 | - | ஹிரோஷிமா தினம் |
| ஆகஸ்ட் 9 | - | வெள்ளையனே வெளியேறு தினம், நாகசாசி தினம் |
| செப்ரெம்பர் 5 | - | ஆசிரியர் தினம் |
| செப்ரெம்பர் 8 | - | உலக எழுத்தறிவு தினம் |
| செப்ரெம்பர் 16 | - | உலக ஓசோன் தினம் |
| செப்ரெம்பர் 26 | - | காதுகேளாதோர் தினம் |
| அக்டோபர் 27 | - | உலக சுற்றுலா தினம் |
| அக்டோபர் 1 | - | உலக முதியோர் தினம் |
| அக்டோபர் 3 | - | உலக குடியிருப்பு தினம் |
| அக்டோபர் 4 | - | உலக விலங்குநல தினம் |
| அக்டோபர் 8 | - | இந்திய விமானப்படை தினம் |
| அக்டோபர் 9 | - | உலக தபால் தினம் |
| அக்டோபர் 10 | - | தேசிய தபால் தினம் |
| அக்டோபா 14 | - | உலகதர தினம் |
| அக்டோபர் 16 | - | உலக உணவு தினம் |
| அக்டோபர் 24 | - | ஐக்கியநாடுகள் தினம் |
| நவம்பர் 14 | - | குழந்தைகள் தினம் |
| டிசெம்பர் 1 | - | உலக எயிட்ஸ் தினம் |
| டிசெம்பர் 4 | - | கடற்படை தினம் |
| டிசெம்பர் 10 | - | மனித உரிமைகள் தினம் |

## பொன் மொழிகள்

✡ ஆண்டவன் எல்லா இடத்திலும் இருக்க முடிவதில்லை
அதனால்தான் அன்னையைப் படைத்தான்.

(இஸ்ரேல் நாட்டுப் பழமொழி)

✡ தாயின் இதயம், குழந்தையின் பள்ளிக்கூடம் – (ஆபிரிக்கா)

✡ ஒரு நல்ல தாய் நூறு ஆசிரியர்களுக்கு ஒப்பானவள் – (ஹேர்பர்ட்)

✡ துருப்பிடித்து தேய்வதைவிட உழைத்து தேய்வது மேலானது
(சுவாமி விவேகானந்தா)

✡ உழைக்காமல் உண்பவன் திருடன் – (காந்தி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

எமது குடும்பத் தலைவி

**அமரர் திருமதி தங்கரத்தினம் சிவபாக்கியம்**

அவர்களின் மரணச் செய்தி அறிந்து உற்று
உதவியோர்க்கும், இறுதிக் கிரியையில்
பங்கு கொண்டு உதவியோர்க்கும்
பிற இடங்களில் இருந்து அனுதாபச் செய்தி
அனுப்பியோர், இன்றைய ஆத்மசாந்தி
பிரார்த்தனை, மதிய போசன நிகழ்வுகளில் பங்கு
கொண்டோர்க்கும் மற்றும் வெவ்வேறு வழிகளில்
உதவியோர்க்கும் மற்றும் யாவர்க்கும் நன்றிகள்
என்றென்றும் உரித்தாகுக.

உரும்பிராய்
26-03-2004

**-குடும்பத்தினர்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

துரையப்பா + தங்கரத்தினம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| செல்லம்மா | அன்னலட்சுமி | ஜெகசோதி | பத்மாவதி | தவராசா | யோகராசா | அரசரட்ணம் | புஸ்பராணி |
| + | + | + | + | + | + | + | + |
| கந்தசாமி | வேலுப்பிள்ளை | நடராசா | வைத்திலிங்கம் | உருத்திரநாயகி | புவனேஸ்வரி | சரசாதேவி | உதயகுலசிங்கம் |
| புவனதேவி | குகதாஸ் | லக்கினேஸ்வரி | சுரேஸ் | ராதிகா | அனுஷா | பிரசாந் | உசானி |
| யோகராணி | குசலகுமாரி | தர்மபாலா | சுஜீபா | சைலஜா | கண்ணன் | பிரகாஸ் | உதீசன் |
| தேவராசா | பாஸ்கரன் | தேவபாலா | | கவிதா | வசந்தன் | | |
| கிருஷ்ணகுமார் | வேணுசுதா | | | | | | |
| யோகேஸ்வரி | | | | | | | |
| சிவக்குமார் | | | | | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய் அதை வீணாக்குவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்து எடுக்கப்பட்டது.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை நீ கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகின்றது.
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org